திருச்செங்கோடு நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை: திரு.இரா.சேகர்,பி.இ.,

ந.க.எண்.3169/2023/எப்1, **நாள்: 22.02.2024**

பொருள் : நகரமைப்பு பிரிவு – திருச்செங்கோடு நகராட்சி – சீத்தாராம்பாளையம் கிராமம், வார்டு–A, பிளாக்.07, நகரளவை எண்.10/6, சர்வே எண்.23/2–ல் 0.94635 ஏக்கர் பரப்பளவில் அமையப்பெற்ற குடியிருப்பு மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :
1. உதவி இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் அவர்களின் கடித ந.க.எண்.NKL/G57RRVIR/3042/2022/TCP,Approval No/SWP/DTCP/NMK/Layout no/264/2022
2. மனுதாரரின் விண்ணப்ப நாள்.23.05.2023.
3. நகராட்சி பொறியாளர் அவர்களின் குறிப்பு நாள்.03.07.2023.
4. இந்நகர்மன்ற தீர்மான எண்.59 நாள்.06.02.2024.

****

உத்திரவு:–

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட, 48 சீத்தாராம்பாளையம் கிராமம், வார்டு–A, பிளாக்.07, நகரளவை எண்.10/6, சர்வே எண்.23/2–ல் 0.94635 ஏக்கர் பரப்பளவில் அமையப்பெற்ற 12 குடியிருப்பு மனைகளுக்கு பார்வை (1)–ல் கண்டவாறு மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களால் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மனைப்பிரிவுதாரர் தானசாசன பத்திரம் எண்.10134/2022–ன் படி மனைப்பிரிவு சாலை, பொது உபயோக இடம் ஆகியவற்றை பதிவு செய்து ஒப்படைத்துள்ளார். மேற்கண்ட விபரத்தினை பார்வை (2)–ல் கண்ட மனைப்பிரிவுதாரரின் கடிதத்தில் தெரிவித்துள்ளார். நகராட்சி பொறியாளர் அவர்களும் நகர் ஊரமைப்பு துறை கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு, அடிப்படை வசதிகள் செய்துள்ளதாக பார்வை (3)–ல் கண்டவாறு குறிப்பு அளித்துள்ளார்.

எனவே, மேற்கண்ட மனைப்பிரிவுக்கு நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு துறையால் வழங்கப்பட்ட NKL/G57RRVIR/3042/2022/TCP,நாள்.29.10.2022–ல் தெரிவித்துள்ள மனைப்பிரிவு நிபந்தனையின்படி, இறுதி ஒப்புதல் வழங்க பார்வை (4)–ல் காணும் இந்நகர்மன்ற தீர்மானத்தின் அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி இம்மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

ஆணையாளர்,
திருச்செங்கோடு நகராட்சி.

22.2.24

பெறுநர் :

திரு.மதன்லால் சாவ்லா த/பெ தௌத்ராம்சாவ்லா,
15C,வித்யாலயா ரோடு,
சேலம்.

நகல் :

1. சார்பதிவாளர், சார்பதிவாளர்அலுவலகம், திருச்செங்கோடு.
2. மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,
க.எண்.6/12,17, பரமத்தி ரோடு (தெற்குப்பகுதி), நாமக்கல்.